உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் விளங்க திருச்சபை அழைக்கப்பட் டிருக்குமானால் அரசாங்கத்தை கணக்கொப்புவிக்கும் பங்கினை செய்யவும் அழைக்கப்பட்டிருக்கிறது. சபை துவங்கின காலத்தில் தேவ சித்தத்திற்கு விரோதமாக செயல்பட அரசாங்கம் அப்போஸ்தலர்களையும் ஆதி கிறிஸ்தவர் களையும் பணித்த பொழுது அவர்கள் எதிர்த்தார்கள். அதற்காக அவர்கள் துன்புறுத்தப்பட்டு, இரத்த சாட்சியாகவும் மரித்தார்கள். இவ்விதமாக அவர்கள் அரசாங்கத்தை கணக்கு ஒப்புவிக்க செய்தார்கள். அதுமுதற்கொண்டு, நூற்றாண்டு காலமாய் தேவ சித்தத்தை சீர்குலத்த அரசாங்கத்தை எதிர்த்து வந்தார்கள்.

முந்தைய காலங்களில் உப்பாகவும் ஒளியாகவுமிருக்க கிறிஸ்தவர்கள் எடுத்த முயற்சிகைன் பயனாக

திருச்சபை ஆரம்ப நிலையிலிருந்து துவங்க வேண்டியது இல்லை. என்ன செய்யப்படவேண்டும் என்றால் அரசு சரியாக அரசிலமைப்புச் சட்டத்தை பகுத்து அமல்படுத்த வேண்டும். சரியான அரசமைப்பு சட்டம் இயங்கும் பொழுது தேவனுக்கு சரியான கணக்கொப்புவித்தலுடன் தீர்க்கதரிசன பொறுப்பும் நிறைவேறும்.

ஒருவர் அரசியலில் தீவிரமாக செயல்படவேண்டும் எனும் அவசியமில்லை. குறைந்த பட்சம் தன் நாட்டைக்குறித்தும் தன் அரசாங்கத்தைக் குறித்தும் உண்மை நிலவரத்தை அறிந்திருந்தாலே போதுமானது. வாக்களிக்க ஏதுவாயிருக்கும்.

நம் தேவைகளை சந்திக்கும் வாக்கினை அளிப்பதின் வழி நம் குடும்பத்திலும் தேசத்திலும் தேவ சித்தத்தை நாடுவதற்கு இயேசு நம்மையும் விடுவித்திருக்கிறார். முதலாவது தேவ ராஜ்ஜியத்தை தேடு.. அப்பொழுது இவைகளெல்லாம் உனக்குக் கூடக்கொடுக்கப்படும். அநேக வேளைகளில்ஒரு இல்லத்தை அமைப்பதற்கு வேண்டியே தேவ இராஜ்ஜியம் தேடுவது தடையாகிப்போகிறது. தேவ சித்தத்தை இப்பூமியில் செய்யத் தேடுவதே ஒரு வாழ்க்கையை அமைப்பதை விட மேலானது என வசனம் கூறுகிறது.

எனவே ஜீவனம் செய்ய வேண்டி, தேவ சித்தத்தை தேட முடியாமல் போகிறது எனக் காரணம் கூறுவது ஏற்புடையதன்று.

மேலும் வாசிப்பதற்கு நிதானித்து வாக்களியுங்கள் எனும் இயூஜின் யாப் (நிர்வாக செயாளர், - பெரித்தா என்.இ.சி.எஃப் அக்டோபர்-டிசம்பர் 2011 என்.இ.சி.எஃப் ஆய்வுப்பணி)எனும் கட்டுரையை வாசிக்கவும்.

தனியாருக்கான சுற்றறிக்கை மாத்திரமே

# கிறிஸ்தவர்களும் & வாக்குப்பெட்டியும்

**13ஆவது பொதுத்தேர்தல் நெருங்குகிறது. மலேசியாவின் எதிர்காலத்தை எவ்விதம் நிர்ணயம் பண்ண நாம் தீர்மானிக்கிறோம்.?**

ஜெபத்திலும் வார்த்தையிலும்,
காப்பிக் கடையில் சம்பாஷணை?,
முழுமையான, நோக்கமுடைய தகவலுடன்?

**நம்முடைய பரிசீலனைகள் என்ன? யாரை எந்த கூட்டணியை ஆதரிப்பது?**

பொருளாதாரமும் நமது நலன்களும் முன்னுரிமை கிடைக்கப்பெறுகிறதா?,

சமய சுதந்திரமும், மனித உரிமைகளும் எவ்வளவு முக்கியம்?,

அரசாங்கம் நியாயத்துடனும் நீதியுடனும் ஆளவேண்டிய விதம் குறித்து வேதம் விதித்துள்ள கட்டளை கவனத்தில் கொள்ளப்படுகிறதா?

**தெரிந்தெடுப்புகள் என்று வரும்பொழுது:**

சோதித்து அறியப்படாத அரசாங்கம்
அவசியமா?

மறுமலர்ச்சி வாக்குகள்
நம்பமுடியுமா?

சமய அடிப்படையாகக் கொண்ட
கட்சிகளை நம்ப முடியுமா?

குறைவாய் தீங்கிழைக்கிற பிசாசை
தெரிவு செய்வது நல்லது என்கிறீர்களா?

## 13ஆவது பொதுத் தேர்தல் : சமய சுதந்திரத்திற்கு ஒரு நெருக்கடி நேரம்

வேதத்தின் படி உலகப் பார்வையில் எல்லா அரசாங்கங்களுக்கான பகிர்ந்தளிப்பும் அதிகாரமும் தேவனிடத்திலிருந்து தான் கிடைக்கிறது. எனவே அவர்கள் எடுக்கிற ஒவ்வொரு தீர்மானத்திற்கும் செயல் நடவடிக்கைக்கும் தேவனிடத்தில் பதில் கூற வேண்டும். நாம் வாழுகிற நிலை, மானிடராக நம் எண்ணங்களை வெளிப்படுத்துகிறதற்குரிய சுதந்திரம், இவற்றை உறுதிப் படுத்துகிறவர்களையே நாம் தெரிந்தெடுக்க வேண்டும்.

எல்லாருடைய நலன்களையும் பராமரிக்கும் அரசாங்கத்தையே நாம் தெரிவு செய்ய வேண்டும். மனசாட்சியின்படியிலான சுதந்திரம், மற்ற மனித உரிமைகளை அது ஜனநாயக ரீதியில் உறுதிப்படுத்த வேண்டும். நல்ல நியாயமான ஜீவனத்திற்கான பொது ஸ்தாபனங்களை பராமரிக்க வேண்டும். குடிமக்கள் சமாதானத்துடனும் சுபீட்சத்துடனும், பொறுப்புடனும் நடப்பதற்கு இச்சூழ்நிலைகள் அவசியம்.

இம்மாதிரி சட்டத்தை பேணுவதிலிருந்து முறையான ஜனநாயக வழிகளை நிலை நிறுத்தும் மட்டும் பல்வேறு நிலைப்பாடுகள் உண்டு. இதில், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல், அதிகார துஷ்பிரயோகம் மேலும் ஊழல் செயல்களை தடை செய்தல் ஏழைகள் மற்றும் புறந்தள்ளப் பட்ட ஜனங்களை ஒடுக்காமல் இருப்பது போன்றவை அடங்கும்.

ஆயினும் கிறிஸ்தவர்களுக்கு கரிசனையான ஒரு காரியம் இருக்கிறதென்றால் அது சமய சுதந்திரமாகும். அப்படியென்றால் ஒருவருடைய நம்பிக்கை மாற்றமும், போதனை வழியும், நடை முறையிலும், தொழுகையிலும், அனுசரிப்பிலும் உள்ள சுதந்திரமாகும்.

மனசாட்சியின் சுதந்திர அளவிலும் சமய சுயாதீனத்திலும் மற்றவர்களை குறிப்பாக சிறுபான்மையினரின் உணர்வுகளை மதிக்க தெரியும் பொழுது தான் ஒரு சமுதாயம் விடுதலை பெற்றது என்று சொல்ல முடியும். இந்த சுதந்திரத்திற்கு மதிப்பளிக்காமல் சுபீட்சத்தைப்பற்றி பேசுகிற சமுதாயம் அதற்கு முரண்பாடான மற்றும் மாறுபாடான கருத்தையே வெளிப்படுத்து கிறது.

எதிர்வரும் தேர்தலில், பல்வேறு சட்ட கூறுகள் கவனிப்பு மத்தியில் இதற்கு முந்தைய தேர்தல்களில் அதிகம் முன் வைக்கப்படாத சமய சுதந்திரத்தை யே என்.இ.சி.எஃப். வலியுறுத்த விரும்புகிறது. இந்த நிலைப் பாடுகளை வேட்பாளர்கள் முன்பாக அரங்கேற்றுவதற்கு இதுவே சரியான தருணம், ஏனெனில் இவ்வடிப்படை சுதந்திரம் நமது கூட்டரசு அரசமைப்பு சட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### ii) தகவல் ஊடகத்தின் தீர்க்கதரிசன பங்கு

அரசமைப்புச்சட்ட்த்தை அரசாங்கமே மீறினால் என்ன ஆகும்? யார் அரசாங்கத்தைக்குறித்த கணக்கை தேவனிட்த்தில் ஒப்புவிப்பது?

இஸ்ரவேலில் தீர்க்கதரிசிகளின் பங்கு இதுதான். உண்மையான தீர்க்கதரிசி, தேவனால் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பட்டு, பத்து கட்டளைகளை மீறுகிற இராஜாவுக்கு தேவ செய்தியைக்கொண்டு அவர்களை எதிர்கொள்ள பணிக்கப்படுகிறார்கள். அரசாங்கம் அரசமைப்பிற்கும் பிறகு தேவனிடத்திற்கும் ஒப்ப கணக்கொப்புவிக்கப் படுவதை வழக்கமாகக் கையாண்டிருந்தனர் அன்றைய தீர்க்கதரிசி கள். இன்றைய நவீன தேசத்தில் அதற்கு நிகரான தீர்க்கதரிசிகளின் நடவடிக்கை என்ன?

மலேசியா போன்ற நவீன கால தீக்கதரிசிகளின் பங்கினை தகவல் அறிந்தவர்களால் ஊடகங்களின் வழி நிறைவேற்றப்படுகின்றன.

ஊடகங்களால் எப்படி அரசியலமைப்புக்கு ஏற்ப அரசாங்கத்தைக் கணக்குக் கேட்பது?

- தேசம் மற்றும் அரசாங்கத்தைக்குறித்த உண்மை நிலவரங்களை எடுத்தியம்புவதின் வழி. தகவலறிந்தவர்கள் ஜனநாயகத்தின்படி அரசமைப்புக்கு ஒப்ப வாக்கு போடுவதின் மூலம்.
- சுதந்திர ஊடகத்தைப் பார்த்து அரசாங்கம் பயப்படும். இது அரசாங்கம் சரியானதைச் செய்ய உதவுவதினால் அரசுக்கும் நாட்டிற்கும் நல்லது. அப்பொழுது தான் தேசம் செழிக்கும்.

ஆனால் அநேக வேளைகளில், ஊழல் நிறைந்த அரசாங்கம் ஊடகங் களை சுதந்திரமாக செயல் பட விடுவதில்லை. அரசாங்கம் ஊடகங்களை கையாளுகிறதென்று அறிய வந்தால், மாற்று ஊடகம் தொடங்கப்பட்டு கரிசனை மிகுந்த குடிமக்களால் அது ஆதரிக்கப்பட வேண்டும். இல்லையெனில் தேசத்தின் குடிகள் அரசாங்கம் என்ன மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறதோ அது மாத்திரம் தெரிய வரும்

## இ. தேவனுடைய சபை எப்படி மறுமொழி கொடுக்க வேண்டும்?

தேவ கட்டளையாய் அவருடைய இராஜ்ஜியத்தையும் நீதியையும் முதலாவது தேடுகிற அழைப்பை சபைகள் பற்றிருக்குமானால் உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் திருச்சபை விளங்கும்(மத்5:13-16)

**ஆ. இன்றைய மலேசியாவைக் காணும்போது**

மலேசியாவைப் போன்ற நவீன தேசத்திலே அரசாங்கத்தின் வட்டம் அதே மூன்று பிரிவுகளைக் கொண்டதாக இருக்கின்றன.

பண்டைய இஸ்ரவேல் இராஜாவுக்கு ஒத்திருக்கும் பிரிவுதான் தேசத்தை ஆட்சி செய்கிறது.அதற்கு நிர்வாகம் என்று பெயர். கூட்டரசு அளவில் நிர்வாகமானது பிரதமரும் அவரது அமைச்சரவையும்; மாநில அளவில் முதலமைச்சர் அவரது அமைச்சரவையும் ஆகும்.

மோசேயின் கட்டளைகளுக்கு ஒத்திருப்பது சட்டம் இயற்றும் குழு. கூட்டரசு அளவில் அதற்கு நாடாளுமன்றம் எனவும்; மாநில அளவில் சட்டமன்றம் எனவும் ஆகும். இந்தப்பிரிவானது தேசத்தின் சட்டத்தை வரையறுப்பதாகும். அது நாட்டின் அரசமைப்புச் சட்டத்திற்கு முரண்பாடில்லாமல் இருக்க வேண்டும்.

நீதியை ஒத்திருக்கும் பிரிவானது நீதித்துறை. இது அரசமைப்பையும் நாட்டின் சட்டத்தையும் வியாக்கியானம் செய்து பயன்படுத்தும்.

**கணக்கு ஒப்புவிக்கும் விஷயம்.**

இஸ்ரவேலை ஒப்பீடு செய்து, மலேசியாவைப் போன்ற ஒரு நவீன நாட்டில் தேவனுடைய சித்தம் என்னவெனில் ஜனங்கள் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க அரசாங்கம் இருக்க வேண்டுமே தவிர பிரதம மந்திரிக்கு அல்ல.

நடைமுறையில் இது சாத்தியப்பட வேண்டுமென்றால்அரசாங்கத்தின் தமைத்துவம் நீதிமன்றத்தின் மீதோ சட்டமியற்றுகிற குழு மீதோ எவ்வித ஆதிக்கமும் இருக்கக் கூடாது. சட்டத்துறை இயற்றுகிற சட்டங்களை வியாக்கியானம் செய்து பயன்படுத்துகிற பணியை செய்கிற நீதித்துறை இருப்பதினால் சரியான நபரை நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுப்பது முக்கியமாகும்.

அப்படியானால் தேவனுக்கு முன்பாக தேசம் கணக்கு ஒப்புவிக்கிறதற்கு அரசாங்கம் எங்ஙணம் செயலாற்ற வேண்டும்., அது எப்படியெனில் பத்து கட்டளைகளுக்கு ஒத்திருக்கிற அரசமைப்புச் சட்டத்தை மக்கள் பற்றிக்கொள்வதின் வழியும் ஊடகங்கள் தீர்க்கதரிசன பங்கை செலுத்துவதின் மூலமாகவுமே.

**i) அரசமைப்பின் இயற்தன்மை**

பத்து கற்பனைகளுக்கு ஒத்திருக்கும் அரசமைப்பு என்றால் என்ன? அது

- அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளும் சுதந்திரமாய் செயல்பட வேண்டும்
- சமய சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும். குடும்பமும் சமயமும் அரசாங்கத்திற்கு அல்லாமல் நேரடியாகத் தேவனுக்கு பதில் தரவேண்டியதினால் தங்களது தெரிவின்படி மக்கள் சமயத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை நிலை நாட்டப்பட வேண்டும். சமயத் தெரிவு தங்களுக்கும் தங்கள் சிருஷ்டி கர்த்தராகிய தேவனுக்குமானது. குற்ற நடவடிக்கைளை ஊக்குவிக்கிற சமயத்தைத் தவிர்த்து வேறு எந்த சமய சுதந்தரங்களிலும் அரசாங்கம் தலையிடக்கூடாது.

பொன்கட்டளைகளை பின்பற்று: எனக்கு மற்றவர் செய்ய வேண்டா மென்றிருப்பதை மற்றவருக்கு நீ செய்யாதே. எல்லா மதங்களும் பொன்கட்டளைகளைப் போதிக்கின்றன. எல்லா பொன் கட்டளைகளையும் சுருக்கி பத்து கட்டளைகளில் இடம்பெற்றிருக்கிறது என இயேசு கூறியுள்ளார் (மத்தேயு 7:12) ஒரு மதத்தையோ அல்லது மதமற்ற கொள்கையில் ஜனங்கள் சார்ந்திருந்தாலும் பத்து கட்டளைகளின் உணர்வை எல்லா மக்களும் உணர்ந்திருக்கின்றனர் என அப்போஸ்தலர் கூறியுள்ளார்.(ரோமர் 2:14-16) எனவே பத்து கட்டளைகளுக்கு ஒத்திருக்கிற எந்த அரசமைப்புமே நிலையானதும் உறுதியானதுமாய் இருக்கிறது.

தேர்தல் வேட்பாளர்கள் கீழ்க்காண்பவற்றிற்கு கணக்கு கொடுப்பவர் களாக இருக்க உறுதிப்படுத்துவோம்.

- கூட்டரசு அரசமைப்புச் சட்டத்தை கடைபிடித்தல்.
- சமய மற்றும் அரசியல் சித்து விளையாடக்கூடாது
- மாநில சட்டங்களை பயன்படுத்தி சிறுபான்மையினரை ஒடுக்குவதோ அச்சுறுத்துவதோ கூடாது.(கிறிஸ்தவர்கள், ஷியா, அஹமடியா)
- தனியார் நிலத்தில் கட்டப்பட்டுள்ள தொழுகைக் கூடங்கள், மற்றும் பூர்வீக குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் உள்ளவைகளை இடித்துத் தள்ளுவது கூடாது.
- சமய மற்றும் மனசாட்சி சுதந்திரத்தக் காக்கும் சட்டங்களை மதிக்கவும் ஒருவர் மார்க்கத்தை மாற்றிக்கொள்ளும் குடிமக்களின் சுதந்திரத்தை முதற்கொண்டு மதிப்பது.
- சிறுபிள்ளைகள் மதமாற்றம், பல்வேறு மதங்களின் பாதுகாப்பு அம்சங்களின் சச்சரவுகள் எதிராக நாடாளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றுவது.
- பிள்ளைகளுக்கும் பின் சந்ததியினருக்கும் இச்சுதந்திரத்தைக் குறித்த பாடங்களை நடத்துவது.
- மற்ற இனங்களை வெறுக்கச் செய்கிற ஐதீகங்களை விதைக்கிற பீரோ தாட்டா நெகாராவின் கொள்கைகளை மறுசீர் செய்வது.
- ஷாரியா சட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக செயல்பட முஸ்லிம் அல்லாதாருக்கு சுதந்திர எல்லையைக் கொடுப்பது
- சமயங்கள் மத்தியில் சுபீட்சமும், சமய சுதந்திரமும் பாதுகாக்கப்பட, எடுக்கிற அமைச்சரவையின் கொள்கைகளை தோல்வியுறச் செய்கிற ஒரு சில வைராக்கியமான அரசாங்க அதிகாரிகளின் விஷமத்தனத்தை கண்டிப்பது.
- தேவையற்ற மத அதிகாரிகளின் செல்வாக்கினால் ஆளப்படாமல் மாநிலங்கள் நிர்வாகம் செய்ய உறுதிப்படுத்துவது.

தேர்தல் வேட்பாளர்களிடம் கேட்கவேண்டிய வேறு சில கேள்விகள்

நீங்களும் உங்கள் கட்சியும் என்ன செய்ய இருக்கிறீர்கள்?

1. ஏழ்மையை ஒழிக்க?
2. வேலை வாய்ப்புகள்?
3. போதுமான மற்றும் வாங்க முடிகிற விலையில் வீடுகள்?
4. நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்கள் உறுதி செய்ய?
5. பொது சேவை துறையில் ஊழல்கள் மற்றும் சுயநலம் அகற்ற?
6. அரசாங்க திட்டங்களில் விரயமற்ற லாபங்கள் தேடுதலைத் தடுக்க?
7. உயர் கல்வி பயிலும் மற்றும் திறமையான மாணாக்கர்களுக்கு சம வாய்ப்புகள் வழங்க?
8. கூட்டரசு அரசமைப்பு சட்டம் பிரிவு 2ன் அடிப்படை உரிமைகளை காப்பது?
9. எல்லா குடிமக்களும் தங்கள் மார்க்கத்தை சுதந்திரமாக பறை சாற்ற மற்றும் அமுல் படுத்த?
10. எல்லா குடிமக்களும் சுதந்திரமாக ஒன்று கூட, கருத்துகளைச் சொல்ல, இயக்கங்கள் செயல்படுத்த?
11. அதிகாரிகளின் தலையீடு இல்லாமல் எல்லா குடிமக்களும் மற்றவர்களோடு தங்களை சமூக ரீதியில், அரசியலில், நிபுணத்துவத்தில், மார்க்கத்தில் இணைத்துக் கொள்ள?
12. நீதித் துறையின் சுதந்திரத் தன்மை நிலை நாட்டப்பட?
13. பொறுப்புள்ள சுதந்திரமான முறையில் பதிப்பகத்தை மேம்படுத்த?
14. தகவல்களைப் பெறுவதில் ஊடக சுதந்திரம்?
15. மலேசிய ஜனநாயகத்தில் தங்கள் குடிமக்கள் அதிக அளவில் பங்கெடுக்க வாய்ப்பு?

**மலேசியாவில் உப்பாகவும் ஒளியாகவும் திகழ**

*முனைவர் லியோங் தினன் ஃபொக்*

ஒரு தேசத்திற்கும் அதின் அரசாங்கத்திற்குமான தேவ சித்தம் என்பதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?

## அ. இஸ்ரவேல் சரித்திரத்திலிருந்து

### அரசியலமைப்பு

தேசத்தின் எல்லா சுற்றிகளிலும் பத்து கட்டளைகளைப் பின்பற்ற இஸ்ரவேலருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதுவே இஸ்ரவேலரின் தலையாய சட்டம். இந்த தலையாய சட்டத்திற்கு ஒரு அரசாங்கமும் அடிபணிய வேண்டும் என்பதுதான் தேசத்தின் அரசியமைப்பு ஆகும்.

### அதிகாரிகள்

பத்து கட்டளையின் ஐந்தாவது கற்பனை “உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக” (உபாகமம் 5:16) கட்டளையென்பது தேசத்தின் மற்ற அதிகாரங்களையும் குறிக்கும். குடும்பத்திற்கு அதிகாரிகள் பெற்றோர். குடும்பத்திற்கு மேலாக நாட்டிற்கு அதிகாரம் தேவை.

உபாகமம் 16 முதல் 18 வரை இன்னும் நான்கு வித அதிகாரப் பிரிவுகள் உள்ளன. நீதிபதிகள், இராஜாக்கள், ஆசார்யர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள். அவரவர்களுக்கு சட்ட எல்லைகள் உண்டு. அதினதின்படி அவர்கள் தேவனுக்கு நேரடியாக பதில் தர வேண்டும். இதனை அவர்கள் பத்து கட்டளைகளில் அடங்கியுள்ள இஸ்ரவேலின் அரசியலமைப்பின் படி தேவ சித்தத்திற்கு இணங்கி செய்ய வேண்டும்.

அதென்னவெனில், தேசத்திற்கு அதிகாரியான இராஜா கூட சாதாரண நிலையில் நாட்டிங் அரசமௌப்புச் சட்டத்திற்கு அடங்கியிருக்க வேண்டும். அவர் மற்றவர்களுடைய அதிகார எல்லையை கடக்கக் கூடாது. அவர் முழு அதிகாரமும் பெற்றவரான படியினால் மற்ற எந்தவொரு அதிகார எல்லையில் குற்றங்கள் நிகழ்ந்திருக்கு மானால் அவர் இடைபடலாம். அந்த விவகாரத்தை நீதிபதி தேவன் கொடுத்த கட்டளைகளின் அடிப்படையில் ஏற்று நடத்துவார். நீதிபதி விடுக்கும் தீர்ப்பை இராஜா தலையிட முடியாது அது போல அவரவர் சுயாதீனமாக செயல்படுவர். இதன் வழி இராஜா தனக்கு அல்ல தேவனுக்கே ஜனங்கள் உத்தரவாதம் கொடுக்க உறுதிப்படுத்துவார்.

அரசாங்கத்தின் அதிகார எல்லை அரசன்,, நீதிபதிகள் மற்றும் மோசேயின் மூலம் தேவன் அருளிய கட்டளை எனும் அடிப்படையில். அப்படியிருக்க அரசாங்கம் மூன்று பிரிவுகளைக் கொண்டதாக மூன்றும் தன்னிச்சையாக இயங்கும் அதிகாரம் பெற்றதாயிருந்தது.